Judicial Form No.53
(Sec.Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure/
XXV Bharatiya Nagarik Suraksha Sanhita)
In the Court of the Judicial Magistrate No.I, Poonamallee
CC.No.330/2024

Calendar )(
Miscellaneous )( Case No. of 202
Preliminary Register )(
Sessions
Deposition of witness for PW.2 (LW) Prosecution
Defence
Court

Name :ராஜீவ்குமார்
Name S/O : சி.என்.சுகுமாறன்
Village :
Taluk :
Calling :
Religion : இந்தியன்
Age :
எதிரி ஆஜர் :எதிரி ஆஜரில் உள்ளார்.
solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969
(Central Act 44 of 1969 on the day of 11.05.2026

<u>7 ம் எதிரி தரப்பில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் 7 ம் எதிரி ராஜேந்திரன் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்தவர் ஆவார். அவர் எங்கள் நிறுவனத்தில் எப்போது வேலைக்கு சேர்ந்தார் 08.12.2021 அன்று வேலைக்கு சேர்ந்தார். மார்ச் 2023 ல் எங்கள் நிறுவனத்தில் இருந்து நின்றுவிட்டார். அவரை எங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்த்ததற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்தததாக நினைவில் உள்ளது. அவருக்கு ஒதுக்கப்பட்ட பணி என்ன என்றால் கிளையண்ட் கோஆர்டினேட்டர் மற்றும் டீம் லீடராக இருந்துள்ளார். அவர் பணியில் சேர்ந்தபோது மேற்படி பணியில் இருந்தாரா அல்லது பணி உயர்வு பெற்று அந்த பணியில் இருந்தாரா என்றால் பணியில் சேர்ந்தபோது கிளையண்ட்

கோஆர்டினேட்டராக இருந்தார்.

எப்போது அவருக்கு பணி உயர்வு வழங்கப்பட்டது என்றால் எப்போது என்று எனக்கு ஞாபகமில்லை. அவருக்கு எங்கள் அலுவலகத்தில் உள்ளே கைப்பேசியை உபயோகிப்பதற்கு அனுமதி உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கின் புகாரானது John medpro hcs.com மின்னஞ்சலிலிருந்து umar bazaz786@gmail.com மின்னஞ்சலுக்கு டேட்டா பரிமாற்றம் செய்து கொண்டதுதான் என்றால் அதுமட்டுமல்ல, வேறு காரணங்களுக்காகவும் புகார் அளிக்கப்பட்டது. மற்ற காரணங்கள் என்று நான் குறிப்பிடுவது எது என்றால் அவர் non disclosure agreement ஐ கடைபிடிக்காதது ஆகும். மேற்படி எதிரி ராஜேந்திரருக்கு வழங்கப்பட்ட non disclosure agreement ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஒப்பந்தத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

non disclosure agreement என்பது எப்படி பணி செய்ய வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் என்றால் எதை செய்ய வேண்டும், எதை செய்ய கூடாது என்பது அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் வாடிக்கையாளருடைய விபரங்கள் பணியில் இருக்கும்போதும் பணியில் இருந்து சென்றபிறகும் அதை யாரிடமும் பகிரக்கூடாது என்றுள்ளது. அந்த நிபந்தனைகளை 7 ம் எதிரி கடைபிடிக்கவில்லை என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். மருத்துவர்கள் மற்றும் நோயாளி வாடிக்கையாளரின் விபரங்கள் 7 ம் எதிரி யாரிடம் கொடுத்துவிட்டதாக நான் சொல்கிறேன் என்றால் போலீசார் விசாரணையின்போது அவருடைய தனிப்பட்ட மின்னஞ்சலில் எங்களுடைய கிளையண்ட் விபரங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை யாரிடம் கொடுத்துவிட்டார்கள் என்பது எனது புகாரில் இல்லை என்றாலும் அவரது மின்னஞ்சலில் அவர் வைத்துள்ளார் என்பதுமட்டுமே எனது புகார் என்றால் அவர் அவரது மின்னஞ்சலில் வைத்திருந்து அதனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு உதவியிருக்கிறார்.

அந்த டேட்டாக்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விசாரணை அதிகாரி அதனை தாக்கல் செய்திருப்பார். நான் எதிரியின் மின்னஞ்சலை எப்படி பார்த்தேன் என்றால் விசாரணையின்போது விசாரணை அதிகாரி 7 எம் எதிரியின் தனிப்பட்ட இமெயில் முகவரியில் எங்கள் அலுவலகத்தின் டேட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை விசாரணை அதிகாரி அவரது விசாரணையின்போது எதிரியின் மின்னஞ்சலை காண்பிக்க சொல்லி அவர் பார்த்துள்ளார். விசாரணை எங்கு செய்யப்பட்டது என்றால் எங்கள்

அலுவலகத்தில் விசாரணை நடைபெறவில்லை. 7ம் எதிரி எந்த டேட்டாக்களை எடுத்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. 7ம் எதிரியின் மின்னஞ்சல் முகவரி மற்றும் பாஸ்வேர்டு விசாரணை அதிகாரிக்கு எப்படி தெரியும் என்றால் விசாரணை அதிகாரியின் விசாரணையின்போது அவர் காண்பித்துள்ளார். விசாரணை அதிகாரி 7ம் எதிரியிடம் இருந்து எந்த ஒரு மின்னஞ்சல் முகவரியும் பெறவில்லை என்றாலும் 7ம் எதிரியை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்பதற்காக நான் அவர்மீது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள Standard Operating procedure தயார் செய்தது 7ம் எதிரி என்றால் இல்லை. தற்போது எதிரி தரப்பு வழக்கறிஞர் என்னிடம் காட்டப்பட்டுள்ள 05.01.2022 தேதியிட்ட Standard Operating procedure ஒரு தனிப்பட்ட டாக்டருடையது. நான் எதிரிகள் திருடியதாக சொல்லக்கூடிய Standard Operating procedure 7ம் எதிரி எங்கள் நிறுவனத்துக்கு வருவதற்கு முன்னதாகவே பொதுவாக எங்கள் கம்பெனிக்கு நாங்கள் தயார் செய்து ஏற்படுத்திக்கொண்ட 144 பக்கங்கள் கொண்ட Standard Operating procedure ஆகும்.

7ம் எதிரி டிஎன்ஜி குரூப் மட்டுந்தான் ேஹண்டில் செய்தார் என்றால் சரிதான். அந்த டிஎன்ஜி குரூப்பில் மொத்தம் 10 நபர்கள் என்றால் சுமார் 15 நபர்கள் வேலை செய்தார்கள். 7ம் எதிரி அலுவலக கணினியைத்தவிர அவரது தனிப்பட்ட கணினியை பயன்படுத்த அனுமதி உள்ளதா என்றால் அனுமதி இல்லை. அவர் வீட்டிலிருந்து பணி செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் குணா என்பவர் எந்த பணியை செய்தார் என்றால் கிளையண்ட் மேனேஜராக பணியாற்றினார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் சேர்த்துள்ளோம். 7ம் எதிரி மொத்தமே 11 கிளையண்ட்டுகளை ேஹண்டில் செய்தார் என்றால் அவர் டிஎன்ஜி குரூப்பின் கிளையண்டுகளை மட்டுந்தான் ேஹண்டில் செய்தார். டிஎன்ஜி குரூப்பில் அவர் ேஹண்டில் செய்தது மொத்தம் 11 கிளையண்டுகள் ஆகும். அதில் 5 மற்றும் 6 எதிரிகள் அடங்குவார் என்றால் டிஎன்ஜி குரூப்பில் டாக்டர்கள் வருவார்கள், போவார்கள். அதில் டாக்டர்களின் உதவியாளர்களும் 4 பேர் இருக்கிறார்கள் என்றால் அதை ஜெய்பாலாஜிதான் பார்த்துவந்தார்.

டிஎன்ஜி குரூப் கிளையண்ட் பணியைத் தவிர அவர் வேறு பணியை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். டேட்டாக்கள் திருடு போவதை கண்காணிக்கும் வகையில் தனிப்பட்ட பிரிவு வைத்துள்ளோமா என்றால் இல்லை. நான் டேட்டாக்கள் திருடு போனதாகதான் வழக்கு கொடுத்துள்ளேன், நம்பிக்கை மோசடி செய்ததாக வழக்கு

கொடுக்கவில்லை என்றால் டேட்டா திருட்டு மூலமாக அவர் நம்பிக்கை மோசடி செய்துள்ளார். அவரிடம் டேட்டாக்களை கொடுத்ததே நம்பிக்கையின் அடிப்படையில்தான். 7ம் எதிரி கிளரிக்கல் பணி மட்டுந்தான் மேற்கொண்டுள்ளார் என்றால் அவர் கிளையண்ட் கோஆர்டினேட்டராக பணியாற்றியபோது அனைத்து பணிகளையும் மேற்கொண்டுள்ளார். 7ம் எதிரி பணியிலிருந்து நின்றபிறகு அவரது பணிவிலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளோமா என்றால் ஏற்றுக்கொண்டோம். அவர் பணியிலிருந்து விலகிய பிறகு அனுபவ சான்றிதழ் எங்களிடம் கோரியிருந்தார் என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் அவருக்கு வழங்கவில்லை என்று நினைக்கிறேன்.

அவர் எங்கள் நிறுவனத்தில் இருந்து நின்றபிறகு லெகசி ெஹல்த் எல்எல்சி லிமிடெட் நிறுவனத்தில் பணியில் சேர்ந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்தில் மின்னஞ்சல் மூலமாக அனுபவ சான்று எதிரி கோரியிருந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 3 முறை மேற்படி நிறுவனத்தின் மூலமாக அனுபவ சான்றிதழ் எங்களிடம் கோரப்பட்டுள்ளது என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் மேற்படி நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்து நாங்கள் அவருக்கு அனுபவ சான்றிதழ் கொடுக்காததால் அவரால் அந்த பணியில் சேரமுடியவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஏப்ரல் முதல் ஜீலை மாதம் வரை அவருக்கு அனுபவ சான்றிதழ் கொடுக்காததால் தான் அவரை அந்த பணியில் இருந்து நீக்கினார்கள் என்றும் அதனால்தான் 7ம் எதிரி 1ம் எதிரியின் நிறுவனத்தில் சேர்ந்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

7ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் இருந்து விலகி 1ம் எதிரியின் நிறுவனத்தில் சேர்ந்ததால் அவர்மீது வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. விசாரணையின்போது எங்கள் நிறுவனத்தின் டேட்டாக்கள் அவரது மின்னஞ்சலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. டேட்டாக்கள் திருடப்பட்டதாக எப்ரல் மாதம் 2023ல் தெரிந்ததாக சொல்லப்பட்ட காலகட்டத்தில் 7ம் எதிரி லெகசி நிறுவனத்தில் பணியாற்றி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. 7ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் இருந்து விலகி நல்ல வேலைக்கு போகக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தால் அவர்மீது வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கொடுத்துள்ள புகாருக்கும் 7ம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் 7ம் எதிரி மீது சுமத்தும் குற்றங்கள் அனைத்தும் கற்பனையாது என்றால் சரியல்ல. 7ம் எதிரி அலுவலக கணினியை மட்டுந்தான் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அவரால் அவரது மின்னஞ்சலுக்கு டேட்டாக்களை மாற்றம் செய்யமுடியாது என்றால் அவர் பணிபுரியும்போது அவரது சொந்த மின்னஞ்சலுக்கு

டேட்டாக்களை அனுப்பி வைத்துவிட்டார். அதுபோன்று எந்த டேட்டாக்களையும் இந்த வழக்கில் குறிப்பிடவில்லை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் விசாரணைஅதிகாரிதான் தாக்கல் செய்திருப்பார். 7ம் எதிரி என்ன குற்றம் செய்துள்ளார் என்று எனக்கு நேரடியாக தெரியவில்லை என்றாலும் காவல் ஆய்வாளர் கூறியதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் விசாரணையின்போது மேற்படி டேட்டாக்களை காண்பித்து எங்களுடையதா என்று கேட்டார்கள், நாங்கள் அதனை பார்த்து எங்களுடையது என்று அவரிடம் சொன்னோம்.

நான் எந்த டேட்டாக்கள் என்று தெரியாது என்று சொல்லிவிட்டு தற்போது முரண்பட சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குறிப்பாக எந்த டேட்டாக்கள் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் டாக்டர் அனுராதா அருண் என்பவருடைய டேட்டாக்கள் மற்றும் அவர் பணிபுரிந்த டிஎன்ஜி நிறுவனத்தின் டேட்டாக்கள் ஆகும். அது மட்டுந்தான் எனக்கு ஞாபகத்தில் உள்ளது. Standard Operating procedure என்பது கூகுலை தேடினாலே கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவர் அனுராதா அருண் டேட்டாக்களை திருடியதால் எவ்வளவு நஷ்டங்கள் ஏற்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் தனிப்பட்டு எதுவும் குறிப்பிடவில்லை. 7ம் எதிரி பணியாற்றிய டீமிலிருந்து வேறு நபர்களை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளோமா என்றால் சேர்த்துள்ளோம். என்னுடைய புகாருக்கும் 7ம் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் வழக்கு பதிவு செய்தபிறகு 1ம் எதிரியின் நிறுவனத்தில் 7ம் எதிரி பணிபுரிகிறார் என்று தெரிந்துகொண்டு அவரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்றம் நடைபெற்ற சமயத்தில் 7ம் எதிரி 1ம் எதிரியின் நிறுவனத்தின் பணிபுரியவில்லை என்றாலும் 7ம் எதிரி இந்த குற்ற சம்பவத்தின்மீது எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

Sdx/-Tmt.M.Amudha
Judicial Magistrate No.I
Poonamallee